**வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியம் - 2024**

--------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது

முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 76 (இ) மற்றும் (ஈ) பிரகாரம் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் அல்லது நடைமுறை அல்லாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,386,999,613 தொகைக்கான முதலீடுகள் அவ்வாறு வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டில் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் சமர்ப்பிக்கப்பட்டவாறே முதலீட்டின் மொத்த பெறுமதி காட்டப்பட்டுள்ளதுடன், 2025 ஆண்டு முதல் முதலீடுகள் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதவை என வகைப்படுத்தப்பட்டு காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களுடன் நேரொத்ததாக இருக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 119 (இ) பிரகாரம் உரிமை மூலதனங்கள் மாற்றங்கள் கூற்றில் ஆக்கக்கூறுகளுக்கான காலப் பகுதி ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் திறன் | திருத்திய உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றொன்று தனியாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆண்டு முதல் அவ்வாறு மாற்றங்கள் திருத்தப்பட்ட கூற்றொன்றின் மூலம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை | கணக்கீட்டு நியமங்களுடன் நேரொத்ததாக இருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மதிப்பீடிடையே இணக்கமொன்று வெவ்வேறாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோல், முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 165,066,545 தொகைக்கான மின்வேலி பெறுமானத் தேய்வு சீராக்கல் மற்றும் முன்னைய ஆண்டின் வருமானம் என இனங்கண்டிருக்காத ரூபா 1,127,473 தொகைக்கான பலகை மற்றும் விரகு விற்பனை வருமானப் பெறுவனவு உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எடுப்பேன். மின்வேலிகள் பெறுமானத் தேய்வு சீராக்கல் ரூபா 165,066,545 தொகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 65 பிரகாரம் சொத்தொன்றின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமையால் ரூபா 113,346,514 தொகை கிரயத்திற்கான 62 மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், அதன்படி, ஏற்பட்டுள்ள மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் படி இந்த சொத்துக்களில் பெறுமானத் தேய்வு 20% என இனங்கண்டு அதன்படி, பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக பெறுமானத் தேய்வுக் கொள்கை எதிர் காலத்தில் மீளாய்வு செய்வதற்கும் மற்றும் தேவையான மாற்றங்கள் தேவைப்படின் அதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கபடும் என அறிவிக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களுடன் நேரொத்ததாக இருக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பூங்கா நுழைவுக் கடடணங்கள், சேவைக் கட்டணங்கள், வாகனங்களின் உட்பிரவேசக் கட்டணங்கள், பங்களாக்களின் பிடவைகள் வாடகைக்கு கொடுக்கும் கட்டணம், யானை பராமரிப்பு நிலையக் கட்டணம் ஆகிய மூலங்களின் கீழ் வலய அலுவலகங்களில் இருந்து தலைமை அலுவலகத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 507,437,762 தொகை வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், காசேட்டில் பதியப்படாமையால் வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத வைப்புக்கள் என காட்டப்பட்டு நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்திருந்தமையால் காசேட்டு மீதி ரூபா 507,437,762 தொகை | திணைக்களக் கணக்குகள் திறைசேரிக் கணக்குகளுடன் 2024.12.31 திகதியில் உள்ளவாறு இணக்கமொன்று மேற்கொள்ளப்படுவதனால், கணக்கேடுகள் மூடப்பட்ட பின்னர் காசு மீதி தொடர்பாக சீராக்கலொன்று மேற்கொள்ள முடியாது. இந்த வருமானம் உண்மையாகவே கிடைத்திருந்த வருமானம் ஒன்றாக காணப்பட்டமையால் வருமானம் என சீராக்கல் செய்யப்பட்டது. இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக கணக்குகளை தீர்க்கும் போது மொத்த வருமானத்தின் பெற்றககொள்ளக்கூடிய அனைத்து வருமானங்களும் வருட இறுதியில் கணக்கீடு செய்யக்கூடிய முறைமையொன்று | அனைத்து வருமானங்களும் வருட இறுதியில் கணக்கீடு செய்யக்கூடியவாறு முறைமையொன்று தயாரித்து சரியாக கணக்குப் பதிவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாகவும், பெற வேண்டிய வருமானங்கள் ரூபா 507,437,762 தொகை மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | தயாரிப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளேன். | |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மணல் அகழ்வுச் செயற்திட்டத்திலிருந்து பெற வேண்டிய மணல் கரையேற்றல் அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 5,263,000 தொகையாக காணப்பட்டதுடன், நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 7,701,533 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மணல் கரையேற்ற அனுமதிப்பத்திரம் மற்றும் பெற வேண்டிய மணல் கரையேற்ற அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 2,438,533 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | இந்த வருமானம் சரியானதல்லதென மார்ச் மாதம் அளவில் கண்டறியப்பட்டது. இந்த மிகை வருமானம் 2025 வருடாந்த கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி<br>ரூபா | வித்தியாசம்<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பண வருமானம் | 151,474,950 | 170,086,999 | 18,612,049 | ஆண்டின் போது உண்மையாகவே செலுத்திய மிகை ஊதியக் கொடுப்பனவு மற்றும் செலுத்த வேண்டிய மிகை ஊதியக் கொடுப்பனவு சீராக்கல் செய்த பின்னர் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டப் பிரிவின் தகவல்களுடன் இணக்கஞ் செய்த போது காலப் பகுதி முறை மற்றும் பெற வேண்டிய, செலுத்த வேண்டி கணக்கு சீராக்கல்களில் வித்தியாசங்கள் ஏற்படக்கூடும். | இரண்டு பிரிவுகளின் ஆவணங்களிடையே வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். |
| நீதிமன்றத் தண்டப் பண அடிப்படையில் செலுத்தப்படுகின்ற மிகை ஊதியக் கொடுப்பனவு | 53,936,477 | 100,858,149 | 46,921,672 | ஆண்டின் போது உண்மையாகவே செலுத்திய மிகை ஊதியக் கொடுப்பனவு மற்றும் செலுத்த வேண்டிய மிகை ஊதியக் கொடுப்பனவு | இரண்டு பிரிவுகளின் ஆவணங்களிடையே வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். |

சீராக்கல் செய்த பின்னர் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டப் பிரிவின் தகவல்களுடன் இணக்கஞ் செய்த போது காலப் பகுதி முறை மற்றும் பெற வேண்டிய, செலுத்த வேண்டி கணக்கு சீராக்கல்களில் வித்தியாசங்கள் ஏற்படக்கூடும்.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 877(1)(இ) | நிதியத்தின் 2024 ஆண்டிற்கான பாதீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் படி வனவிலங்கு பாதுகாப்பு நிதியத்தின் மூலம் செலவீடுகள் மேற்கொள்வதற்காக உரிய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி, 2024 ஆண்டிற்கான வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் பாதீடு, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரதியொன்று திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) நிதிப் பிரமாணம் 877(1)(ஈ) | அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்று இன்றி நிதியத்தின் கீழ் செலவுகள் ஏதும் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும், அவ்வாறான அங்கீகாரம் ஒன்றின் கீழ் ரூபா 2,923,347,754 இற்கான செலவுகள் 2024 ஆண்டின் போது நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் 2024 பாதீடு இரு தடவைகள் திருத்தப்பட்டுள்ளதுடன், திருத்திய பாதீட்டின் அங்கீகாரத்தின் படி குறிப்பிட்ட செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | (iii) நிதிப் பிரமாணம் 877(2)(அ) | அனைத்து நிதியங்களுக்காகவும், தனிப்பட்ட வங்கிக் கணக்கொன்று பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும், நிதியத்தின் அலுவல்கள் திணைக்கள வங்கிக் கணக்கின் மூலம் பொது வைப்புக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வனவிலங்குகள் அமைச்சின் மூலம் அரச நிதித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அறிவுரைகளின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 877 (2)(இ) தொடர்பான வழிகாட்டல் 4 இன் பிரமாணம் 3 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் நிதியத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யக்கூடியவாறு செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய காலாண்டு சார் முன்னேற்றம் காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் அரச நிதித் திணைக்களம், தேசிய பாதீட்டுத் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. | 2025 ஆண்டு முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய காலாண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட திகதிக்கு உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணம் மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2019 ஜுன் 13 திகதிய 01/2018(i) இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3 | அனைத்து அரச நிறுவனங்களினாலும், வழங்கப்படுகின்ற பல்வேறு சேவைகளினாலும் தற்போது வழங்கப்படுகின்ற கட்டணங்கள் 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2006 பெப்ரவரி 20 திகதிய 1433/4 இலக்கம் கொண்ட விஷேட வர்த்தமானி பிரகாரம் தேசிய காப்புக் காடு ஒன்றில் அல்லது சரணாலயம் ஒன்றில் அமைந்துள்ள நீர்த் தேக்கம் ஒன்றில் மீன் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் மீன் பிடி வள்ளங்களுக்காக | கட்டணத் திருத்திற்காக மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட வர்த்தமானியின் இறுதி வரைவு சட்டவரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் தகவல்கள் வினவப்பட்டுள்ளதுடன், அந்த தகவல்களும் சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டணத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அறவிடப்படுகின்ற ரூபா 250 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,493,692,811 இற்கான மிகையயொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,517,770,342 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 1,975,922,469 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டதுடன், நுழைவுக் கட்டணத்தின் விலை அதிகரித்தல், வரக்கூடிய பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 1,732,778 தொகை பெறுமதிக்கான மஹகனதராவ மின் வழங்கல் மற்றும் ரன்தெனிகல பயிற்சி நிலையத்தின் ஒளிமயமாக்கல் ஆகிய விடயங்களின் வேலை 2025 மே அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மின்சார சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், இதுவரை மின்சாரம் வழங்கப்பட்டிருக்காததுடன், தேவையான பீவீசீ குழாய்கள் கணக்குப் பிரிவின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு ரன்தெனிகல அலுவகத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், கருமங்கள் முடிவடைந்திருக்கவில்லை. | திட்டமிட்டவாறு செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | குற்றவாளிகளிடம் நீதிமன்றத்தினால் அறவீடு செய்யப்படுகின்ற அனைத்து தண்டப்பணமும் நிதியத்திற்கு அறவீடு செய்வதற்கும் அவ்வாறு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற பணம் உரிய தரப்பினருக்கு தாமதமொன்றின்றி வெகுமதியாக வழங்கக்கூடியவாறு நீதிவான் நீதி மன்றம், பொலிஸ் திணைக்களம் மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் இடையே தகவல்கள் பரிமாறும் முறையொன்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக நீதி மன்றங்களிலிருந்து கிடைத்துள்ள ஆனால் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்படாத மிகை ஊதியக் கொடுப்பனவு ரூபா 87,336,100 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றின் ரூபா 46,085,600 தொகை 02 வருடங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால தாமதத்துடனான மிகை ஊதியம் ஆகும். | சட்டப் பிரிவிலிருந்து தகவல்கள் வினவியிருந்ததுடன், உரிய தகவல்கள் கிடைத்தவுடன் உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். | உரிய தரப்பினர்களிடையே தகவல்கள் பரிமாரக்கூடிய முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், மிகை ஊதியம் செலுத்த வேண்டிய நபர்களை இனங்கண்டு தாமதம் இன்றி கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |